



■ பிரதமர் நரேந்திர மோடி நேற்று திருப்பூரில் நடைபெற்ற விழாவில், ஏ.ஜி.-டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரை சென்னை மெட்ரோ ரயில் பயணிகள் சேவையை காணொலிக் காட்சி வாயிலாக கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, சட்டப்பேரவை தலைவர் ப.தனபால், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

# சென்னை டி.எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ ரயில் சேவை

## பிரதமர் நரேந்திர மோடி, முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தொடங்கி வைத்தனர்

திருப்பூர், பிப். 11-

திருப்பூரில் நடைபெற்ற விழாவில் சென்னை டி.எம்.எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி, முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

பிரதமர் நரேந்திர மோடியும், முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமியும் நேற்று திருப்பூரில் நடைபெற்ற கோலாகல விழாவில் சென்னை டி.எம்.எஸ்.- வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைத்தார்கள். அதைத்தொடர்ந்து சென்னை கே.கே. நகரில் கட்டப்பட்டுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை விமான நிலைய மேம்பாட்டு திட்டம், திருச்சி சர்வதேச விமான நிலைய வளாகம், ராமேஸ்வரம் பாம்பன் புதிய ரயில் பாலம் ஆகியவற்றுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிற்பகல் விஜயவாடாவில் இருந்து தனி விமானம் மூலம் கோவை வந்தார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டரில் 3.05 மணிக்கு திருப்பூர் அருகே பெருமாநல்லூர் வந்து சேர்ந்தார். பிரதமரை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி மற்றும் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

வரவேற்பு முடிந்ததும் அனைவரும் விழா மேடைக்கு சென்றனர். முதலில் சென்னை வண்ணாரப்பேட்டை- டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரயில் போக்குவரத்து சேவையை காணொலி காட்சி மூலமாக பிரதமரும், முதலமைச்சரும் தொடங்கி வைத்தனர்.

ராமேஸ்வரம் பாம்பன் புதிய பாலத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். இதன் பின்னர் திருப்பூரில் 100 படுக்கை வசதிகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை மற்றும் திருச்சி சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார். சென்னை சர்வதேச விமான நிலைய இரண்டாவது முனையத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார். சென்னை எண்ணூர் கடற்கரை துறைமுகம் மற்றும் எண்ணூர் முதல் மணலி வரை கச்சா எண்ணெய் குழாய் ஆகியவற்றை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் ப.தனபால், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் மற்றும் தமிழக அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, உடுமலை கே.ராதாகிருஷ்ணன், சத்தியபாமா எம்.பி., திருப்பூர் வடக்கு தொகுதி எம்.எல்.ஏ. கே.என். விஜயகுமார், திருப்பூர் தெற்கு தொகுதி எம்.எல்.ஏ சு.குணசேகரன், பல்லடம் தொகுதி எம்.எல்.ஏ கரைபுதூர் நடராஜன், காங்கேயம் தொகுதி எம்.எல்.ஏ. தனியரசு, தலைமை செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பிரதமர் வருகையையொட்டி திருப்பூரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 3 ஐ.ஜி.க்கள் தலைமையில் 17 எஸ்.பி.க்கள் உள்பட 3 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

விழா முடிவுற்ற பின்னர் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பிரதமர் கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் அக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.